# வீரக்கெட்டிய பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்தவத்தின் காரணமாக வீரக்கெட்டிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிலையான வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,000,000 தொகை மீளப் பெறப்பட்டிருந்ததுடன் அதனை நிலையான வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைத்ததை திருத்துவதற்காக குறிப்பிடப்பட்ட நாட்குறிப்புப் பதிவின் மூலம் ஏனைய வருமானக் கணக்கில் வரவு வைக்க வேண்டிய ரூபா 1,000,000 தொகை

பிழையாக ஏனைய உபயோகக் கணக்கு இரண்டிலும் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட மீதிக்கும் பேரேட்டுக் கணக்குகளின் மீதிக்கும் இடையே ஏற்பட்ட ரூபா 10,764,352 தொகையான இணக்கமின்மைகளை நீக்கவதற்காக அவ்வாறு இணங்காமைக்கான காரணங்களைப் பரீட்சிக்காமல் ஐந்து நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் ரூபா 1,225,567 தொகை செலவிலும் ரூபா 9,538,785 தொகை திரண்ட நிதியத்தில் வரவிலும் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் 12 மகநெகும வேலைகளுக்காக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 3,231,697 கூட்டுத்தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) இரண்டு மகநெகும வேலைகளுக்குரிய ரூபா 1,000,000 தொகை கடன்கொடுத்தோராக ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 505,382 தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ‘‘தொறின் தொரட்ட கமின் கமட்ட’’ செயற்திட்டத்தின் கீழ் நிதி கிடைக்கப் பெற்ற இரண்டு வேலைகளுக்காகவும் செயற்படுத்தப்படாத வேலையொன்றிற்காகவும் கிடைக்க வேண்டிய பணம் வேலைக் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீண்டும் ரூபா 4,337,190 தொகை கடன்பட்டோராக ஏற்பாடு செய்யப்பட்டமையால் மூலதன மானியம் மற்றும் கடன்பட்டோர் என்பன அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டிய வேலைகளின் நிறுத்தி வைத்தலாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 229,910 தொகையொன்று கடன்கொடுத்தோர் பெறுமதியிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 05 வேலைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 108,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இயந்திர உபகரண செயற்திட்டத்தில் வாகனங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பொதுச் செயற்பாடுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 5,397,380 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 1,000,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தரொருவருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 189,700 தொகையிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 187,700 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

புத்தகங்கள், பட்டோலைகள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 5,932,866 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிப் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,168,404 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,780,023 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

---

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,770 | 979 | 3,493 |
| (ii) | வாடகை | 17,538 | 17,655 | 2,202 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,758 | 1,564 | 4 |
| (iv) | ஏனைய வருமானம் | 36,233 | 34,161 | 5,772 |

### 2.2.2 ஆதன வரி

---

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதன வரி வருமானமான ரூபா 3,445,055 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இந்த நிலுவைப் பணத்திலிருந்து ரூபா 5,000 இற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 824,244 ஆக இருந்ததுடன் 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 வாடகை**

---

**(அ) கடை வாடகை**

---

2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் உப பிரிவின் பிரகாரம் சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளது வரையாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான பஸ்மங் சந்தியில் நான்கு கடைகளினதும் பொதுச் சந்தையில் ஏழு கடைகளினதும் உடன்படிக்கைகள் 25 வருடங்களை விட பழையதாக இருந்த போதிலும், அந்த உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொன்று 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகைப் பணம் புதிய மதிப்பீட்டாளரின் மூலம் திருத்தம் செய்ய வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது அறவிடப்பட்ட கடை வாடகைப் பணத்திற்காக மதிப்பீடொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சந்தை வாடகை**

---

ஆண்டின் இறுதியில் நிலுவை சந்தை வாடகைத் தொகையான ரூபா 916,887 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 இயந்திர உபகரண வருமானம்**

---

மீளாய்வாண்டின் இறுதியில் வெளித்தரப்பினர்களிடமிருந்தும் சபையின் உறுப்பினர்களிடமிருந்தும் ரூபா 667,424 தொகை அறவிட வேண்டியிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,772,041 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயலாளரின் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமித்தல்

அரச முகாமைத்துவ சேவையின் II ஆம் வகுப்பின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் செயலாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சனநாயக சோசலிசன் குடியரசின் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக படிகள் செலுத்தப்பட்டமையால் ரூபா 70,000 கூட்டுமொத்தமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஊழியர் கடன்

சபையின் எழுதுவினைஞர் பதவியொன்றில் சேவையாற்றிய உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட இடர்கடனில் ரூபா 106,002 தொகையான மீதி அந்த உத்தியோகத்தர் வேலையிலிருந்து விலகி நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒரு பாடசாலைக்கும் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிப்பாடசாலைகளுக்கும் வழங்குவதற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்த 03 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 275,200 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக 1987 இன் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ)(ஓ) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வலஸ்முல்ல உப அலுவலகத்திற்கு 1992 பெப்ரவரி மாதம் முதல் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த முன்பள்ளிப்பாடசாலை உதவியாளரொருவர் 2007 ஆகஸ்ட் மாதத்திலிருந்து தென்மாகாண அரசாங்க சேவையின் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பெண் உத்தியோகத்தரின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக கல்விச் சான்றிதழ்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2011 ஒக்தோபர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் மாதத்தின் போது அந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தின் பதிவேடுகளுடன் இணங்காதிருந்தாகவும் அவை போலியான சான்றிதழ் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 28 ஆந் திகதி கல்விச் சான்றிதழ்கள் இணங்காதிருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்திருந்தும் 2014 மே 07 ஆந் திகதி அந்த உத்தியோகத்தர் வேலை நீக்கஞ் செய்யும் வரையிலும் அவருக்கு சம்பளம் மற்றும் படிகளாக சபையினால் ரூபா 367,312 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொங்கிரீட் கல் மற்றும் கற்தூள் போக்குவரத்து

---------------------------------------------------------------------------------------

பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் அமுல்படுத்தப்பட்ட 26 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 169,704 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கற்துாள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் பயன்படுத்தாமை

--------------------------------------------------------------------------------------------

மகநெகும வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீதிகளுக்காக வீதிகளின் அடிப்பகுதியில் 2 அங்குல தடிப்பத்தில் கற்துாள் இடப்பட்டதாகக் காண்பித்து கொடுப்பனவு அறிக்கை தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 மார்ச் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நான்கு வேலைகளுக்காக 02 அங்குல தடிப்பத்தில் வீதிகளின் அடிப்பகுதியில் கற்துாள் இடப்படாதிருந்தமையும் அதனைவிட குறைவான அளவில் கற்துாள் இடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 02 அங்குல தடிப்பத்தில் கற்துாள் இடப்பட்டதாகக் காண்பித்து கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 91,938 கூட்டுமொத்தத் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கொங்கிரீட் தட்டுக்கள் உரிய பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டாமை

--------------------------------------------------------------------------------------------------------

சபையினால் அமுல்படுத்தப்பட்ட மகநெகும வேலைகளின் 03 வீதிகளில் இரு பக்கமும் 06 அங்குர உயரத்தில் கொங்கிரீட் தட்டை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் 27 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு கொங்கிரீட் தட்டு நிர்மாணிக்கப்படாததிருந்தமை அவதானிக்பபட்டதுடன் அதன் படி ரூபா 48,320 கூட்டுமொத்தத் தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிர்வாகம்